பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 01 சனிக்கிழமை (14-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 108

# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினர் விரைவில் யாழ்ப்பாணம் வருவர்?

## விடுதலைப் புலிகள் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 14

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பிரதிநிதிகள் விரைவில் யாழ்ப்பாணம் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெரிவுக்குழுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதி கோரி விடுதலைப் புலிகளுக்கு தகவல் அனுப்பியதாகவும் —

அவர்களுக்கு அனுமதி வழங்கும் பதிலை விடுதலைப் புலிகள் அனுப்பியிருப்பதாகவும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுடன் இணக்கம் காணாமல், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இயலாத காரியம் என்று தெரிவுக் குழுவின் மூத்த பிரதிநிதிகள் பலரும் கருதுவதாகவும் —

இதனால் தீர்வுக்கான இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தரப்புக் கருத்தை உத்தியோகபூர்வமாக அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துவதாகவும் அறிய வருகிறது.

அவர்களின் வற்புறுத்தலை அடுத்தே தெரிவுக்குழு வடக்கே வருவதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் மூலம் புலிகளிடம் கேட்கப்பட்டதாக அறிய வந்தது.

எழுத்து மூலம் யோசனை சமர்ப்பித்தவர்களை நேரில் அழைத்து விளக்கம் கேட்கும் பணி நாளையுடன் பூர்த்தியாவதால், தெரிவுக் குழுவின் பிரதிநிதிகள் அனேகமாக இம்மாத இறுதிக்குள் யாழ்ப்பாணம் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## தெரிவுக் குழுவின் முன்

## டாக்டர் சிவகுமாரன் சாட்சியம் அளிக்கவில்லை

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் சிவகுமாரன் சாட்சியமளிக்கவில்லை.

கடந்த புதன்கிழமை டாக்டர் சிவகுமாரன் தெரிவுக் குழு முன் தமது யோசனைகள் குறித்து நேரில் விளக்கமளிக்க ஏற்பாடாகி இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் அவர் தனது முடிவை மாற்றிக் கொண்டு விளக்கமளிக்கச் செல்லாது தவிர்த்துக் கொண்டார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வாய்மூலமான சாட்சியமளிக்க தெரிவுக் குழுவினால் அழைக்கப்பட்ட ஒரேயொரு தனிநபர் டாக்டர் சிவகுமாரன் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## தென்னிலங்கைக் குழுவினர் நாளை புலிகளுடன் பேச்சு

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள தென்னிலங்கை நல்லெண்ணத் தூதுக் குழுவினர் நாளை ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது,

மெதடிஸ்த சபையைச் சேர்ந்த இந்த தூதுக் குழுவினர் யாழ். அரச அதிபர், யாழ். ஆயர், பிரசைகள் குழுப் பிரமுகர்கள் ஆகியோருடன் நேற்று பேச்சு நடத்தினர்.

யாழ். பல்கலைக் கழகத்துக்கும் அவர்கள் நேற்று விஜயம் செய்தனர்.

நாளை மாலை இந்தக் குழுவினர் கொழும்பு திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ-3]

## படையினர் பரவலாக வேட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 14

குடாநாட்டிலுள்ள பல முகாம்களில் இருந்தும் கடற் பகுதியில் இருந்தும் நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் படையினர் பரவலாக வேட்டுக்களைத் தீர்த்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வளலாய், வீமன்காமம், கட்டுவன், திருவடிநிலை, மாதகல், பூநகரி, கல்முனை மற்றும் சித்தன் குறிச்சி பகுதிகளிலேயே படையினர் துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தியதாகக் கூறப்பட்டது. [ஒ-51]

## ப. நோ. கூ. சங்கங்களில்

# பங்கீட்டு அட்டையின்றி அரிசி, மா பெறலாம்!

யாழ்ப்பாணம், மார்ச் 14

ப. நோ. கூ. சங்கங்களில் பங்கீட்டு அட்டையின்றி அரிசி, மா ஆகிய உணவுப்பொருள்களை இன்று முதல் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் யாழ். அரச அதிபரை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியதை அடுத்து இதற்கான இணக்கம் காணப்பட்டது.

ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் அரிசி ஒரு கிலோவை 15 ரூபாவுக்கும், மா ஒரு கிலோவை 13 ரூபா 50 சதத்துக்கும் விற்பனை செய்வது என்றும் நேற்று முடிவானது.

சீனி மற்றும் பருப்பு வகைகளை அடுத்த வாரம் முதல் ப. நோ. கூ. சங்கங்களில் கட்டுப்பாடின்றி கொள்வனவு செய்யவும் வசதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## முச்சந்தி முரளி



வாயைக் குடுத்து வாங்கிக்

## புளியங்குளத்தில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு

வவுனியா, புளியங்குளம் பகுதியில் நேற்றுப்பகல் 11.30 மணியளவில் மூன்று பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

குண்டு வீச்சினால் வீடு ஒன்று சேதமானதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து மேலதிகத் தகவல்கள் ஏதும் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை.

இதேசமயம்—

முல்லைத்தீவு, குமுழமுனைப் பகுதியில் நேற்று முன்தினம் ஹெலி ஒன்று வாகனங்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## பிரபா பற்றிய விவரங்களை இந்தியா கோருகிறது!

கொழும்பு, மார்ச் 14

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மற்றும் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் ஆகியோர் பற்றிய விவரங்களை முறைப்படி தம்மிடம் அளிக்கும்படி இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசு கேட்டிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய கோரிக்கை விடுப்பது சம்பிரதாயபூர்வமான ஒரு நடவடிக்கை என்றும் தெரிவிக்கப்பட்டது.

''திரு. பிரபாகரன் எங்குள்ளார்? அவரது இரத்தப் பிரிவு என்ன? அவர் குறித்த தகவல்கள் என்ன? அவரின் உதவியாளர்கள் யார்? என்பவை உட்பட பல்வேறு கேள்விகள் இந்தியத் தரப்பால் கேட்கப்பட்டுள்ளனவாம். [உ-எ-10]

## இந்திய ராணுவ தளபதியை பதவி விலக்க கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 14

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் றொட்ரிக்கஸைப் பதவி நீக்கம் செய்யும்படி இந்திய அரசாங்கத்தை எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது.

இந்தியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுதமற்ற தெற்காசிய பிராந்தியத்தை உருவாக்கும் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்கா, சீனா, ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

இரு நாடுகளும் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடுவது குறித்து இந்த மூன்று ''பெருச்சாளி''களுக்கும் என்ன வேலை என்று இராணுவத் தளபதி ஜெனரல் றொட்ரிக்கஸ் கூறியிருந்ததைத் தொடர்ந்தே, அவரை உடனடியாக பதவி நீக்கம் செய்யும்படி எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தைக் கோரியுள்ளன.

இந்திய ஜெனரலின் கருத்து பக்கத்து நாடுகளுடனான உறவைக் கெடுக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. [உ-எ]

## காங்கேசன் சிமெந்து ஊழியர் சுயவிருப்பில் ஓய்வுபெறவசதி

யாழ்ப்பாணம், மார்ச் 14

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்கள் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறும் திட்டம் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தலைமையகத்தில் இருந்து இது சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்று யாழ் அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளது.

சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறவிரும்புவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றும், அவர்களுக்குரிய சேமலாபநிதி கொடுப்பனவு உடன் கிடைக்க உறுதி செய்யப்படும் என்றும் அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன் சிமெந்து ஆலையை மக்கள் மயமாக்க முடிவாகியுள்ளதாலேயே இந்த இளைப்பாறும் திட்டம் அமுல் செய்யப்படுவதாகவும்—

இந்தத் திட்டத்தின் கீழ் இளைப்பாற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவருட மலிவுவிற்பனை

**1992 ஆம் ஆண்டுக்கான**

★ திருக்கணித மாதக்கலண்டர்

★ திருக்கணித டயரி

என்பன மலிவுவிலையில் விற்பனையாகின்றன.
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

தொடர்பு;
திருக்கணிதம், சாவகச்சேரி.

(4524)



## அறிவித்தல்

### மொத்த விற்பனை

கீழ்க்காணும் பொருள்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து விற்பனவு செய்ய விரும்பும் தனியார், கூட்டுறவு நிறுவனங்கள் வசதியான கொத்தணி அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பொருள்கள்

★ பனை வெல்லம்
பனம் சீனி
★ பனம் கல்லாக்காரம்
குளிர்பானங்கள்
புழுக்கொடியல்
★ பனம் உணவுப் பொருள்கள்
★ பனம் கைப்பணிப் பொருள்கள்

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகங்கள்**

1. பொதுமுகாமையாளர்,
தென்மராட்சி பகுதி தெ.ப.பொ.கூ. சங்கங்களின்
கொத்தணி அலுவலகம்,
கச்சாய் வீதி,
கொடிகாமம்.

2. பொதுமுகாமையாளர்,
வடமராட்சி பகுதி தெ.ப.பொ.கூ. சங்கங்களின்
கொத்தணி அலுவலகம்
மந்திகை — புலோலி
[முன்னைய இலங்கை வங்கி கட்டடம்]

3. பொதுமுகாமையாளர்,
வலிகாமம் பகுதி தெ.ப.பொ.கூ. சங்கங்களின்
கொத்தணி அலுவலகம்-பிரதான வீதி, சங்கானை.

4. பொதுமுகாமையாளர்,
யாழ். பகுதி தெ.ப.பொ.கூ. சங்கங்களின்,
கொத்தணி அலுவலகம்,
இல. 370, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

| விசேட விலைக் குறைப்பு | | மொ.வி. | சில்.வி. |
|---|---|---|---|
| பனை வெல்லம் | 1 கிலோ | 38/- | 40/- |
| பனம் சீனி | 1 ” | 38/- | 40/- |

**பொது முகாமையாளர்,**
வடமாகாண தெ.ப.பொ கூ.ச.சமா.
499, கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்.

[சி/1707]



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு :
**10 — 03 — 1932**

உதிர்வு :
**28 — 03 — 1991**

### சங்கரப்பிள்ளை திருச்சிற்றம்பலம்

] ஓய்வுபெற்ற பொலீஸ் பிரதம பரிசோதகர் ]

**பங்குனி பூர்வபக்க திரியோதசி**

அன்பின் சிகரமே அருமை அப்பா!
அன்பாலும் பண்பாலும் அரவணைத்து வளர்த்தீரே!
அரைகுறையில் விட்டுவிட்டு அரன்பாதம் சென்றுவிட்டீர்
பாசத்தை ஊட்டிப் பண்புடனே வளர்த்துவிட்டுப்
பரிதவிக்க விட்டுவிட்டீர் பரமனடி நாடிவிட்டீர்
பாதியிலே நிற்கின்றோம் பாதையோ புரியவில்லை
பாசமுள்ள அப்பாவே! பாதைஎது காட்டுங்கள்.

அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய இதயம் நெகிழ்ந்து இறைவனை இறைஞ்சுகிறோம்.

57, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

[20075]


## இன்று

★ யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பாடும் மீன் கழக அணி மோதும்.

★ சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று இரண்டாவது நாளாக நடைபெறும்.

★ யாழ். இந்துக்கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை சுன்னாகத்தில் இடம்பெறும்.

★ யாழ். பல்கலைக்கழக அணிக்கும் ஷப்றா அணிக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகும்.

★ நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையத்தில் இன்று காலை 10 மணிக்கு நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட உள்ளது.

[உ-த-51]

## நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 14

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கு நாளை காலை 10 மணிக்கு கோண்டாவிலுள்ள கழக தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

இவ்வார அமர்வில் திரு. ஏ. வி. மாணிக்கம் ‘‘எனது பத்திரிகைத் துறை அனுபவம்’’ என்ற பொருளில் கருத்துரையாற்றுவார். [ஒ]

★ ★ ★

தொண்டர் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று, நாளை காலை 9.30 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப் படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [ஒ]

★ ★ ★

தென்மராட்சி, மார்ச் 14

மட்டுவில் தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. [ஒ-117[

## ஈழ மாணவர் சாதனை

லண்டன், மார்ச் 14

ஒன்பது வயதான ஈழத் தமிழ்ச் சிறுவன் ஒருவன் லண்டனில் ஜி. ஸி. எஸ். ஈ. [கணிதப் பிரிவு] பரீட்சையில் ‘‘ஏ’’ தரத்தில் சித்தி பெற்று பல்கலைக்கழக புகுமுக வகுப்புக்கு—உயர்தர வகுப்புக்கான — கல்வியை ஆரம்பித்திருக்கிறான்.

லண்டன் ரூட்டிங்கிலுள்ள புறோட்வாட்டர் பாடசாலையில் கல்வி பயிலும் சிவபாதசுந்தரம் வாகீசனே இச் சாதனையைப் புரிந்துள்ளான். வாகீசனின் சொந்த இடம் புங்குடுதீவு ஆகும்.

சராசரியாக பதினாறு வயது மாணவன் படிக்கும் வகுப்பில் தற்போது வாகீசன் கல்விபயில்வது குறிப்பிடத்தக்கது.

கல்வியாளராகிய சிற்றம்பலத்தின் மகன் கணேசனும் லண்டனில் எட்டு வயதில் ஜி. ஸி. எஸ். ஈ. பரீட்சையில் சித்தி எய்தினான் என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்தரப் பரீட்சையிலும் சித்தி பெற்று பல்கலைக்கழகம் புகுந்திருக்கும் கணேசன் 12 வயதில் பட்டதாரியாவார் [illegible] து. [உ]


## அறிவித்தல்

**அம்பிகை அடியார்களே!**

இணுவில் திருவருள்மிகு சிவகாமி அம்மன் திருக்கோயில திருச்சப்பறத் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அடியார்கள் தாமாக முன்வந்து நிதியுதவி செய்து ஒத்துழைப்புத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

— திருச்சப்பறத் திருப்பணிச்சபை

[20076]



## திருமறைக் கலாமன்றத்தின்

நாடகப் பயிலகம் வழங்கும்

# நெஞ்சக் கனகல்

(நாடகம்)

இடம்: 238, யாழ். பிரதான வீதி
மன்ற அரங்கு

காலம்: 15 — 3 — 1992 ஞாயிறு

நேரம்: மாலை 6.45 மணி

[C/1770]



## சுன்னாகம் ஐயனார் கோயிலில் பட்டிமன்றம் [நீதிமன்றம்]

7 ஆம் திருவிழா இன்று 14-03-92

‘‘சூர்ப்பனகையை மானபங்கப்படுத்தியது (மூக்கறுத்தது) குற்றம்’’

| வாதிகள் | எதிர்வாதிகள் |
|---|---|
| க. நாகேஸ்வரன் M.A. | தி. திருநந்தகுமார் |
| சி. சிவகுமார் | இரா செல்வவடிவேல் |
| க. குமாரதாசன் | ஆ. திருமுருகன் |

நீதிபதியாக ஜெயராஜ் (கம்பன்கழக அமைப்பாளர்)

இன்னிசைக் கச்சேரி; திரு, பொன். சுந்தரலிங்கம்

மேளக் கச்சேரி : காலம் சென்ற சின்னராசாவின் மகன் ரவி குழுவினரும் கோவிந்தசாமியின் புதல்வர்களும்

(நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்)

பட்டிமன்றம் இரவு 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

[20077] — 7 ஆம் திருவிழா உபயகாரர் —



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

### மகாபொல கொடுப்பனவு

3-ம், 4-ம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செயற்படும்.

**இரண்டாம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் / கலைப் பிரிவு / வர்த்தகப் பிரிவு / வியாபார நிர்வாகப் பிரிவு | 16.03.92 | 9.00—12.00 மு.ப. |
| | 19.03.92 | 9.00—12.00 மு.ப. |
| | 23.03.92 | 9.00—12.00 மு.ப. |

**மூன்றாம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் / கலைப் பிரிவு / வர்த்தகப் பிரிவு / வியாபார நிர்வாகப் பிரிவு | 16.03.92 | 1.30—3,00 பி.ப. |
| | 19.03.92 | 1.30—3.00 பி.ப. |
| | 23.03.92 | 1.30—3.00 பி.ப. |

**நான்காம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் (4-ம், 5-ம் வருடம்) / கலைப் பிரிவு / வர்த்தகப் பிரிவு / வியாபார நிர்வாகப் பிரிவு | 17.03.92 | 9.00—12.00 மு.ப. |
| | 20.03.92 | 9.00—12.00 மு.ப. |
| | 24.03.92 | 9.00—12.00 மு.ப. |

**2-ம், 3-ம், 4-ம் வருடம்**

| | | |
|---|---|---|
| பொதீக விஞ்ஞானப் பிரிவு / உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 17.3.92 | 1.30—3.00 பி.ப. |
| | 20.3.92 | 1.30—3.00 பி.ப. |
| | 24.3.92 | 1.30—3.00 பி.ப. |

**கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:-**

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை.
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை.

— பதிவாளர்

[சி-1709]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்



# தெரிவுக் குழுவின் முடிவை சுதந்திரக் கட்சி ஏற்கும்

## அனுரா கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 14

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது விசாரணை இறுதியில் வெளியிடும் முடிவை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஏற்கும்.

பதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா செய்தியாளர் மாநாடு ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யுத்தத்தைத் தாம் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தெரிவுக் குழுவின் விசாரணைகள் பெரும்பாலும் பூர்த்தி அடைந்து விட்டன என்றும், ஏப்ரல் நடுப் பகுதியில் அறிக்கை வெளிவரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தெரிவுக் குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கான கடைசித் தினம் நாளை 15 ஆம் திகதி ஆகும்.

[இ-எ]

# முல்லைத்தீவில் கடும் வரட்சி: காலபோகம் பாதிப்பு

புதுக்குடியிருப்பு, மார்ச் 14

முல்லைத்தீவு மாவட்டத்தில் வரட்சியால் காலபோக வேளாண்மை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளம், முத்தையன் கட்டுக்குளம் ஆகியவற்றில் நீர் மட்டம் குறைந்துள்ளது.

சில வயல்களில் நெற்பயிர் இடைநடுவில் கைவிடப்பட்டு விட்டதாகவும் இதனால் நெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து இருந்து வருவதாகவும் தெரியவருகிறது.

[இ-126]

### உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க

# சிட்னி மாநாட்டில் யாழ். பிரதிநிதிகளும்

ஆஸ்திரேலியா சிட்னி நகரில் அக்டோபர் மாதம் 3 ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க 5 ஆவது சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ள, யாழ்ப்பாணத்தில் இருந்தும் பிரதிநிதிகள் செல்லவிருக்கின்றனர்.

சர்வதேச மாநாட்டுக்கு முன்னோடியாக பாண்டிச்சேரியில் ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் சிறப்பு மாநாட்டிலும் யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளையின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம் பெற்ற சமயம், மேற்கண்ட விடயம் ஆராயப்பட்டு முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-3]

# பாடசாலைகள் 3 ஆம் திகதி விடுமுறை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். மாவட்ட பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்காக அடுத்த மாதம் 3 ஆம் திகதி மூடப்படும். மே மாதம் 4 ஆம் திகதி பாடசாலைகள் இரண்டாம் தவணைக்குத் திறக்கப்படும்.

யாழ். கல்வி அலுவலக அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

[இ-3]

### பிரபாவைச் சந்திக்க

# பௌத்த குருமார் வடக்கே செல்வது தரக்குறைவானது

## பிரதம நாயக்க தேரர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 14

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனைச் சந்திக்க பௌத்த குருமார் வடக்கே செல்வது தரக்குறைவான செயல்.

பொலன்னறுவை மாவட்ட பிரதம சங்கநாயக்க தேரர் இப்படி கருத்து வெளியிட்டிருக்கின்றார்

திரு. பிரபாகரன் தாம் செய்தவை பிழை என்பதை ஏற்று ஜனாதிபதியையும் பௌத்த குருமாரையும் சந்திக்க தெற்கே வரவேண்டும். அதனை விடுத்து நாம் பிரபாகரனைத் தேடி வடக்கே செல்வது தரக்குறைவான செயல்.

இப்படி பிரதம சங்க நாயக்க தேரர் கும்பக்கடவல ஸ்ரீ பிராணந்த தெரிவித்திருக்கின்றார்.

வடபகுதி செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் பௌத்த குருமார்கள் ஈடுபட்டுள்ளனர் என வெளியான செய்திகள் பற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கைப் பிரித்து அங்கு ஆட்சி நடத்தவே பிரபாகரன் மற்றும் மாத்தயா ஆகியோர் யுத்தம் நடத்தி வருகின்றனர் என்றும் பிரதம சங்க நாயக்க தேரர் கூறினார். [இ-எ]

### தமிழீழ ஆய்வு நிறுவனம் நடத்திய

# வதிவிட வேளாண்மை போட்டியின் முடிவுகள்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பிரிவினால் நடத்தப்பட்ட 1991—92 ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைச் செய்கைப் போட்டியில், இணுவில் வடக்கைச் சேர்ந்த செ. தயாபரன் முதலிடம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பத்து கமநல சேவைப் பிரிவுகளில் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் ஏராளமானோர் பங்கு பற்றினர்.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**மாவட்டம்:**

1. செ. தயாபரன் — (கே. கே. எஸ். வீதி, இணுவில்), 2. கி சுகிர்தலிங்கம்—(புலோலி வடக்கு, மந்திகை), 3. வை. சரஸ்வதி—(தாளையடி).

**வலிகாமம் பிரிவு:**

1. வை. சாந்திகுமார்—(உடையார் ஒழுங்கை, கொக்குவில்), 2. அ. ஆனந்தராஜா-(கணேஸ் வீதி, சங்கானை), 3. த. இராமநாதன்—(நந்தள் வீதி, இணுவில் மேற்கு).

**வடமராட்சிப் பிரிவு:**

1. இ. செல்வகாந்தம் (நெல்லியானை, செம்பியன் பற்று), 2. வி. பலாமணி—(கெருடாவில் வடக்கு, கெருடாவில்), 3. ம, புலேந்திரன்—(கரணவாய் வடக்கு, வதிரி)

**தென்மராட்சிப் பிரிவு:**

1. பொ. நவரத்தினராசா] [நுணாவில் மேற்கு, நுணாவில்], 2. புஸ்பராணி சுகுமார்—[அல்லாரை வடக்கு. மீசாலை], 3. கு. தனபாலசிங்கம்—[இயக்கச்சி, முகாவில்].

கமநல சேவைப் பிரிவு மட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று பரிசுகளும் பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

# அன்னை பூபதி பொது அறிவு பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 14

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினர் நடத்தும் அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

ஆண்டு 7 முதல் 13 வரையான வகுப்பினருக்கு அன்றைய தினம் காலை — மாலை இருவேளைப் பரீட்சைகள் நடத்தப்படும்.

இந்தப் பரீட்சையில் வடக்கில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவாகள் தோற்ற உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# பழுதடைந்த அரிசி கால்நடை உணவானது!

கொழும்பு, மார்ச் 14

மனித பாவனைக்கு உதவாததாகக் கழிக்கப்பட்ட 2ஆயிரத்து 753 மெற்றிக் தொன் அரிசி கால்நடை உணவுத் தயாரிப்புக்காக கால்நடை அபிவிருத்திச் சபையின் கால்நடை உணவுத் தொழிற்சாலைக்கு வழங்கப்பட உள்ளது

பழுதடைந்த இந்த அரிசியின் பெறுமதி 3 கோடி 20 லட்சம் ரூபா என்று அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்தார். [ஒ-எ]

# சர்வதேச தொண்டர் நிறுவன பிரதிநிதிகள் யாழ். வருகை

சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வர ஆரம்பித்துள்ளனர்.

போரூட் நிறுவனத்தைச் சேர்ந்த ரிரிங் டி. கில்லான்ட், ரிட்பிக், ரூரிக் ஆகியோர் நேற்று முன்தினம் இங்கு விஜயம் செய்து தமது அமைப்பு மேற்கொள்ளும் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்தனர். பருத்தித்துறை, சுழிபுரம் ஆகிய பகுதிகளுக்கும் அவர்கள் நேற்று விஜயம் செய்தனர்.

ஐக்கிய இராஜ்ஜிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பணிப்பாளர் செல்வி கிரிஸ்ரின். இலங்கை வதிவிடப் பிரதிநிதி செல்வி மரியான் ஆகியோர் வியாழனன்று இங்கு வந்து சேர்ந்தனர்.

நாளை 15 ஆம் திகதி வரை இங்கு தங்கி இருக்கும் இவர்கள் அகதி முகாம்கள். நிவாரணப் பணிகள் ஆகியவற்றை பார்வையிடுவர்.

இவர்களை விட மேலும் பல நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இவ்வாரம் இங்கு வரவிருக்கின்றனர்.

[ஒ-3]

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் தளர்ச்சியா?

## இல்லை என்கிறார் சவான்

புதுடில்லி, மார்ச் 14

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அரசு தீவிரமாக இல்லாமல் தளர்ச்சி காட்டுகிறது என்ற குற்றச்சாட்டை மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் திட்டவட்டமாக மறுத்திருக்கின்றார்.

இத்தகைய குற்றச்சாட்டுகள் முற்றிலும் உண்மையானவை அல்ல என்றும், குற்றவாளிகளை விசாரணைக்குக் கொண்டு வர அரசு உறுதி கொண்டுள்ளது என்றும் திரு. சவான் ராஜ்ய சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

ராஜீவ் கொலையுண்ட சம்பவம் தொடர்பாக எடுக்க வீடியோ கஸட் நாடாக்களில் தில்லுமுல்லுகள் இடம் பெற்றிருக்கின்றனவா என்பதை அறிய வெளிநாட்டு நிபுணர்களின் உதவியை சிறப்புப் புலனாய்வுப் பொலீஸார் நாடியுள்ளனர் என்றும் திரு. சவான் கூறினார். [இ-எ]

# மினிவான் சேவை

தென்மராட்சி, மார்ச் 14

சாவகச்சேரியிலிருந்து பளை, சங்கானை, மருதனார் மடம் ஆகிய இடங்களுக்கான மினிவான் சேவை கடந்த வாரம் முதல் நடைபெற்று வருகிறது. [இ-117]



# அறிவித்தல்

S. S. R. அரிசி ஆலை தேங்காய் எண்ணெய் ஆலை இயந்திரம் பொருத்தி மீண்டும் வேலை ஆரம்பித்துள்ளோம் என்பதை வாடிக்கையாளருக்குத் தெரிவித்துள்ளோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| உழுந்து உடைக்க | 1 கிலோ | — | ரூபா | 1-00 |
| கொப்பரா } இலுப்பை } | 1 கிலோ | — | ரூபா | 6-50 |
| புழுங்கல் | 1 கிலோ | — | ரூபா | 2-00 |
| நெல் உடைத்து தீட்ட | 1 கிலோ | — | ரூபா | 2-50 |
| நெல் உடைக்க | 1 கிலோ | — | ரூபா | 2-00 |
| மிளகாய் அரைக்க | 1 கிலோ | — | ரூபா | 25-00 |
| அரிசி மற்றும் தானியம் அரைக்க | 1 கிலோ | — | ரூபா | 4-00 |
| குரக்கன் குத்த | 1 கிலோ | — | ரூபா | 2-00 |

[கூலிகள் தற்காலிகமானது]

**S. S. R.**

அரிசி ஆலை தேங்காய் எண்ணெய் ஆலை,
1ஆம் கட்டை, டச்சு வீதி,
சாவகச்சேரி.

[20052]



முதுபெருங்கலைஞர்களான
நாதஸ்வர மேதைகள்
மாவிட்டபுரம் எஸ். கே. இராசா
யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை
ஆகியோரின்

★ பாராட்டு விழா ★

கடந்த 1992 மார்ச் மாதம் 7ஆம் திகதி நடைபெற்ற மேற்படி பாராட்டு விழாத் தொடர்பாக உதவி புரிந்த கலைஞர்களுக்கும், ஆசியுரை, சிறப்புரை, தலைமையுரை ஆகியன வழங்கிய பெரியார்களுக்கும், பாராட்டுரை வழங்கிய அறிஞர்களுக்கும், மண்டப அலங்காரம், ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும், வீடியோ, நிழற் படப்பிடிப்பாளர்களுக்கும், மண்டப உரிமையாளர்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும், சுவைஞர் பெருமக்களுக்கும், பத்திரிகை நிறுவனங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- விழா அமைப்பாளர்கள்.

[20071]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள். நான்கு மாதம் பூச்சி நீக்கியது. அவற்றுடன் கலர் மீன்களுடன் மீன் தொட்டியும் விற்பனைக்கு உண்டு. செ. ஆனந்தன், அரசடி, தாமோதரம் பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

[20004]

## மணமகன் தேவை

குற்றமற்ற 27, 30 வயது டாக்டருக்கும், வயது 31 ஆசிரியைக்கும், குற்றமுள்ள 31 வயது B. A. ஆசிரியைக்கும், 30 வயது B. Sc க்கும் கனடாவை விரும்பும் 23 வயதுப் பெண்ணிற்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

[20039]

## இலவச திருமண சேவை

32 வயது, செவ் 7. கொழும்பில் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரிக்கு மணமகளும், 25 வயது, A/L Computer படித்தவருக்கு Professional தரத்தில் மணமகனும் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[4528]

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடனே கிடைக்கும். ஜாதகம், குறிப்பு எழுதிப் பலன் கூறப்படும். கைரேகை, விவாகப் பொருத்தம் சொல்லப்படும். தொடர்பு: த. சிவானந்தன், பிரபல ஜோதிடர் ஆனந்தா ஜோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

[20025]

## அம்பாள் திருமண சேவை

எலெக்ரோனிக் என்ஜினியர் சைவம், M.Sc. பொறியியலாளர் I.C.M.A., கணக்காளர் சைவம், B. Sc. ஆசிரியர், வங்கி உத்தியோகத்தர் ஆகிய மணமக்களுக்கு டாக்டர், பட்டதாரி மணப்பெண்கள் தேவை. விண்ணப்பம் ரூபா 50/-. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர்.

[20062]

## VINAYAHAR

MANIPAY.

**A/L 93**

**கலை, வர்த்தக-**

**ஆண்டு**

**11, 10, 9, 8, 7, 6, 5**

வகுப்புகள் நடைபெறுகின்றன.

தமிழ் — ஸ்ரீதயாளன் (B. A.)

சமூகக்கல்வி — சந்திரா (B. A.)

கணிதம் — R. ரட்ணவேல்

விஞ்ஞானம் — தயாநிதி

ஆங்கிலம் — R. D. பகீரதன்

வர்த்தகம் { அற்புதராஜா, மகேஸ்வரன்

[20068]

## "பெண்களே உங்களுக்கு"

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டதும், பெரியார்களின் சீரிய கருத்துக்களைக் கொண்டதுமான மேற்படி நூலைப் பத்து மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம்.

[சி/1701]

## பரீட்சை (ஆண்டு- 56,,)

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை ஆண்டு 6, 21-3-92 சனி மு. ப. 7-00, மு. ப. 11-00 மணி நேரங்களில் நடைபெறும். ஆண்டு 5 பரீட்சை 22 - 3 - 92 ஞாயிறு மு. ப. 7 - 00, மு. ப 11 - 00 மணி நேரங்களில் நடைபெறும். முற்கூட்டியே பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[19942]

## முக்கிய அறிவித்தல்

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்திலுள்ள கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு 15-03-1992 ஆம் திகதியிலிருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கின்றது. இந் நாய்களினால் சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படும் என அஞ்சப்படுவதால், கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதற்கு இச் சபை தீர்மானித்துள்ளது. பொது மக்கள் வீட்டில் வளர்க்கும் நாய்களைக் கட்டி வைத்து வளர்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விசேட ஆணையாளர்,
வலி. மேற்குப் பிரதேச சபை,
சுழிபுரம்.

[சி-1705]

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 02 — 12 — 1964



உதிர்வு: 27 — 02 — 1988

### அமரர் கு. தில்லைராஜன்

நினைவு தினம்: 14—03—1992

நீ மறைந்து நான்காண்டு
நிலவுமிந்த வேளைதனில்
நாம் மறந்து போவோமா
நற்சுதனே தில்லைராஜா!
தாய் வருந்தித் தத்தளிக்கும்
தாங்கொணாச் சோகநிலை
நீயறியாய்! எப்போதும்
நினைவுதனில் நிற்பாயே!

உன் பிரிவை ஆற்றாத:
அன்னை-
கு. அகிலேஸ்வரி.

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

[சி-1596]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 09 11 1922 ❀



மறைவு: 14 03 1991 ❀

### சீமாம்பிள்ளை மரியாம்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

அன்பால் அரவணைத்து, பாசத்தால் வளர்த்து, நல்வாழ்வுக்கு வழிகாட்டிய எம் அன்புத் தந்தையே! ஓராண்டு சென்றாலும் உம் அன்புமுகம் மறையாதையா! உங்கள் நினைவுகளை எம் நெஞ்சிலிருத்தி, உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும்;
- குடும்பத்தினர்.

தும்பளை,
பருத்தித்துறை.

(20058)

# ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிவபாக்கியம் சிவபாதசுந்தரம்**

தோற்றம்: 15 — 04 — 1936
அழிப்பு: 12 — 03 — 1991



அமரர்
**நல்லதுரை ஸ்ரீபத்மநாதன்**

தோற்றம்: 25 — 03 — 1956
அழிப்பு: 12 — 03 — 1991



திருமதி
**மாலினி ஸ்ரீபத்மநாதன்**

தோற்றம்: 09 — 10 — 1957
அழிப்பு: 12 — 03 — 1991

துயர் உற்ற வேளையில் யாவர்க்கும் துயர் துடைத்த அன்புக் கரங்களே! பார் புகழப் பல்லாண்டு வாழ்வீர்களென நாமிருந்தோம். கொடுங்காலன் கொடும் செயலால் மூவரும் ஒன்றிணைந்து சென்றீர்களே! உயிர் உள்ளவரையும் உங்களை நாம் மறவோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

15-03-1992 அன்று இவர்களின் இல்லத்தில் நடைபெறும் ஓராம் ஆண்டுக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து, அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நா. சிவபாதசுந்தரம்,
ந. வரதராஜா.

பொன்னம்பலம் வீதி,
உடுவில் றோட், மானிப்பாய்.

[20069]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## உண்மையான தொண்டர்கள்

உண்மைத் தொண்டன் தான் செய்யும் தொண்டுக்குள் மறைந்திருந்து தொண்டு புரிய வேண்டும். புகழுக்காகத் தொண்டாற்றக் கூடாது.

உணவுக்கு ருசி சேர்ப்பது உப்பு. தனக்கு வரும் புகழை, தான் சேரும் கறி வகைகளுக்குக் கொடுத்துவிட்டு உள்ளே இருப்பது உப்பு. உண்மையான தொண்டனும், உப்பைப் போல, தொண்டுக்குள் மறைந்திருந்து தொண்டு செய்ய வேண்டும்.

இவ்வாறு ஆத்மஜோதி நா. முத்தையா, இந்து சமயப் பேரவையின் பாதயாத்திரையின் போது நிகழ்த்திய அருளுரை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அடுத்தவனுக்குத் தொண்டு செய்வது, உதவி செய்வது என்பது மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகும். தொண்டு அல்லது உதவி பல வகைப்பட்டது. நொந்து போனவனுக்கும், வசதி குறைந்தவனுக்கும், நோய் வாய்ப்பட்டு வலு இழந்து போனவனுக்கும் தொண்டு செய்வது தெய்வத்துக்குச் செய்யும் பூசைக்குச் சமமானது.

இரக்கம், கருணை, அன்பு, மனிதாபிமானம், மனித நேயம் ஆகிய பண்புகளும் ஏனைய சீரிய குணாம்சங்களும் கொண்டவர்கள் ஏதோ ஒரு வகையில், வடிவத்தில் தம்மாலான தொண்டை அடுத்தவனுக்கு அல்லது சமூகத்துக்குச் செய்யவே முற்படுகிறார்கள்.

அவ்வாறு முற்படுபவர்கள் எல்லோரும் உண்மையான தொண்டர்கள் என்று கூறிவிட முடியாது. தமது சுய நலத்துக்காக — ஒன்றில் பணத்துக்காக, அல்லது புகழுக்காக — தொண்டாற்ற முன்வருபவர்களே அநேகர்.

இது கவலைக்குரியது. தொண்டு தூய்மையானது. இறைசேவைக்கு ஒப்பானது. தொண்டன் என்ற பெயரில், போர்வையில் தொண்டை மாசுபடுத்த முயல்பவன் தொண்டன் அல்லன்.

ஆகையால் தொண்டு செய்யப் புறப்படுவதற்கு முன்னர் தொண்டு என்றால் என்ன, அதன் மகிமை என்ன, உண்மைத் தொண்டனுக்கு வேண்டிய தகுதிகள் யாவை என்பதை ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். தொண்டு என்ற பெயரில் மற்றவர்களை ஏமாற்றவும், மோசடி செய்யவும், அடுத்தவனுக்குப் பாதகம் அல்லது துரோகம் செய்யவும் மக்கள் சொத்தைச் சூறையாடவும் முனைவதை விட தொண்டு செய்யாமல் இருப்பது மேல்.

இந்தத் தொண்டை யார் செய்தார் என்று மற்றவர்கள் வியந்து கேட்கும் அளவுக்குத் தன்னை முதன்மைப்படுத்தாமல் தொண்டு செய்பவனே உண்மையான தொண்டன். மறைந்திருந்து தொண்டு செய்பவனே மதிப்புக்குரியவன். மகிமைப்படுத்த வேண்டியவன்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசலும், சுய நலம் கருதி தொண்டு செய்யப் புறப்படுதலும் சமூக விரோதமானவை.

சங்கங்கள் சபைகள் தொடக்கம், சமூக சேவை அமைப்புகள் தொண்டர் நிறுவனங்கள் வரை; ஆலய பரிபாலன சபைகள், வழிபடுவோர் சங்கங்கள் தொடக்கம் புனர்வாழ்வு, புனரமைப்புகளைக் கையாளும் அமைப்புகள் வரை உண்மையான தொண்டர்கள் தேவை.

நமது சமூகம் முன்னேற, விடுதலை பெற, சுபீட்சம் அடைய, மேன்மையுறத் தேவைப்படுபவர்கள் உண்மையான தொண்டர்களே!

# 'வன்னி விக்ரம-3' படையினர் கொள்ளையில் ஈடுபட்டனர்?

## ஆனால் இராணுவப் பேச்சாளர் மறுக்கிறார்

கொழும்பு, மார்ச் 14

வவுனியாவில் சமீபத்தில் நடத்தப்பட்ட 'வன்னி விக்ரம-3' இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினர் கொள்ளையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா மறுத்துள்ளார்.

'வன்னி விக்ரம-3' இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினர் கொள்ளையில் ஈடுபடவில்லை என்றும் —

ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையும் முடிவடைந்து இராணுவத்தினர் முகாம் திரும்பும் போது முதலில் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும் — கேர்ணல் முனசிங்கா தெரிவித்தார். (இ-எ)

## நுவரெலியாவில் ஒரு தொண்டமான்புரவா?

### எதிர்க்கட்சிகள் போர்க்கோலம்

நுவரெலியாவில் உள்ள கொட்டகலைப் பிரதேசம் 'தொண்டமான்புர' என்று அழைக்கப்படுவதாக மத்திய மாகாண சபையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கொட்டகலையில் மலையகத் தமிழ் இளைஞர்களுக்கு என்று மட்டும் உயர் கல்விக் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது என்றும் —

நுவரெலியா நகரில் உள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் சக்தி வாய்ந்த அமைச்சர் ஒருவரின் செல்வாக்குக் காரணமாக கொட்டகலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு வருவதாகவும் மத்திய மாகாண சபையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தை கொட்டகலைக்கு இடமாற்றம் செய்வதைக் கண்டித்து தாம் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக மத்திய மாகாண சபையில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர். [இ-எ]

## சங்கீத நடனப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நடைபெறவுள்ளன.

பாடசாலைகளிலிருந்து விண்ணப்பித்த பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை அதிபர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முதல் யாழ். கல்வித் திணைக்களத்தில் இருந்து பெற்று பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்குப்படி கோரப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என்றும் —

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் செயல்முறைப்பரீட்சை பாடசாலைப் பரீட்சார்த்திகளின் செயல் முறைப் பரீட்சைகளைத் தொடர்ந்து நடைபெறும் என்றும் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (இ-5)

## தீவிரவாதிகளை பிடித்து தந்தால் சன்மானமாம்

சென்னை, மார்ச் 14

''தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். தீவிரவாதிகளைப் பிடித்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.''

சென்னை பொலீஸ் அதிபர் இராஜகோபால் மேற்கண்ட அறிவிப்பை நேற்று விடுத்துள்ளார். [ஒ-3]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

தமிழீழ ஆய்வு நிறுவன மையப் பணியகத்தில் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெற இருந்த பொறியியலாளர்களுடனான கலந்துரையாடல் அன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## ஏமாற்றம்

நவாலி, மார்ச் 14

யாழ். செயலகத்தில் பாஸ்போர்ட் விண்ணப்பப் படிவங்கள் முடிவடைந்துள்ளதால் இவற்றைப் பெற வருபவர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-100]

## 258 அரச அலுவலர் மீது இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 14

நாட்டிலுள்ள கல்வி அதிகாரிகள், உயர்தரப் பாடசாலை அதிபர்கள், பொலீஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 258 உயர் அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இலஞ்ச ஆணையாளர் திருமதி நெலும்கமரே இத்தகவலை வெளியிட்டார்.

இலஞ்ச ஊழல் குற்றஞ்சாட்டப்பட்ட தனி நபர்களில் 50 இற்கும் மேற்பட்டோர் பொலீஸ் உத்தியோகத்தர்கள் ஆவர்.

இது தொடர்பாக 158 போ மீது ஏற்கனவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும்—

ஏனையோர் மீது வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் கூறினார்.

புகார் செய்யப்பட்டவர்களில் நீதி உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள், சுங்க அதிகாரிகள், சுகாதாரப் பரிசோதகர்கள், இறைவரி உத்தியோகத்தர்கள், வனபரிபாலன உத்தியோகத்தர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், காவல் அதிகாரிகள், வைத்திய உத்தியோத்தர்களும் அடங்குவர்.

## லக்ஸ்பிறே விலை குறைப்பு

கொழும்பு, மார்ச் 14

லக்ஸ்பிறே மாவின் விலை பக்கட்டுக்கு 2 ரூபாவால் குறைக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது. [உ-ஏ]

## பக்தர்கள் மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 14

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில், ஸ்ரீராமகிருஷ்ணர் ஜயந்தியையொட்டி இன்று சனிக்கிழமை பக்தர்கள் மாநாடு நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் மாநாட்டில் ''ஸ்ரீராமகிருஷ்ணர் உலகுக்கு அளித்த மூன்று பொக்கிஷங்கள்'' என்னும் பொருளில் கருத்துரை, ஆய்வுரை ஆகியன இடம்பெறும். திரு. செ. ஸ்ரீநிவாசன், சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்துவர்.

## 'பேட்ரியட்' ஏவுகணை ரகசியம் சீனாவிடம்!

### இஸ்ரவேல் விற்றதாம்!!

வாஷிங்டன், மார்ச் 14

அமெரிக்கத் தயாரிப்பான ''பேட்ரியட்'' ஏவுகணைத் தொழில் நுட்பத்தை இஸ்ரவேல் சீனாவிற்கு விற்றுவிட்டதாக 'வாஷிங்டன் போஸ்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான நேசநாடுகள் யுத்தம் ஒன்றை நடத்திய போது, ஈராக் நடத்திய 'ஸ்கட்' ஏவுகணைத் தாக்குதலை முறியடிக்க அமெரிக்கா இஸ்ரவேலுக்கு 'பேட்ரியட்' ஏவுகணைகளை வழங்கியது தெரிந்ததே.

அதன் பின்னரே இஸ்ரவேல் 'பேட்ரியட்' ஏவுகணைத் தொழில் நுட்பத்தை சீனாவிற்குக் கள்ளத்தனமாக விற்றுள்ளதாக 'வாஷிங்டன் போஸ்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் பதற்றமடைந்துள்ளனர்.

'பேட்ரியட்' தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி 'பேட்ரியட்' ஏவுகணையை வெற்றிகரமாக முறியடிக்கக் கூடிய புதிய ரக ஏவுகணையைத் தயாரிக்கக் கூடிய நிலையை சீனா அடையும் வாய்ப்பு அதிகரித்திருப்பதாகவும், அந்த நிலை ஏற்படுமானால் அமெரிக்கா வைத்துள்ள 'பேட்ரியட்' ஏவுகணைகள் செல்லாக்காசாக மாறிவிடும் என்றும் அமெரிக்க இராணுவ தலைமையக வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை — 'பேட்ரியட்' தொழில் நுட்பம் சீனாவிற்கு இரகசியமாக இஸ்ரவேலினால் வழங்கப்பட்டது என்ற செய்தியை இஸ்ரவேல் பாதுகாப்பு அமைச்சர் மோஷே ஆறென் மறுத்துள்ளார்.

சீனாவும் இச்செய்தி கற்பனையானது என்று தெரிவித்துள்ளது. [இ-எ]

## பிரபாவை நாடு கடத்த முடியுமா?

### 'டெய்லி நியூஸ்' கருத்தும் அமைச்சரின் மறுப்பும்

கொழும்பு, மார்ச் 14

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்தியா கோரினால் அது சாத்தியப்படுமா?

இது சம்பந்தமாக, அரசாங்க சார்புப் பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' வெளியிட்ட செய்தி ஒன்று குறித்து வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

''திரு. பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்தியா கோரவில்லை. அப்படி நாடு கடத்துவதும் சாத்தியம் அல்ல. அதற்கு இடமும் இல்லை'' என்று 'டெய்லி நியூஸ்' நாளிதழ் நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தது.

இது குறித்து அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் விளக்கமளித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் குற்றவாளிகளை சம்பந்தப்பட்ட நாட்டிடம் ஒப்படைப்பதற்கான சட்டம் ஏதும் இல்லை.

இந்த இரு நாடுகளையும் நாடு கடத்தும் சட்டத்தின் கீழ் இரு பொதுநலவமைப்பு நாடுகளுக்கு இடையேயான தனியான ஏற்பாடாக குற்றவாளிகளை நாடு கடத்துவதற்கு இடமுண்டு.

பொதுநலவமைப்பு நாடு கடத்தல் ஏற்பாட்டுக்கு ஏற்புடைய நாடுகளாக இந்தியாவும் இலங்கையும் ஒன்றை ஒன்று அங்கீகரித்துள்ளன.

ஏனைய நாடுகளின் நாடு கடத்தல் சட்டங்களைப் போலவே எமது நாட்டிலும் நாடுகடத்தல் சட்டத்தில் சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

நாடு கடத்தலுக்கான கோரிக்கை கிடைத்ததும் சட்ட அதிகாரிகள் இந்த விவரங்களை ஆராய்வார்கள். பின்னர் அது குறித்த ஆலோசனையை அவர்கள் கூறுவார்கள். அதன் பின்னர் நீதிமன்றத்தில் ஆரம்ப வழக்கு ஒன்று தாக்கல்செய்யப்படவேண்டும்.

சார்க் பயங்கரவாத ஒழிப்பு சாசனத்தின் கீழ் எமது கடப்பாடுகளை நிறைவேற்றுவதை வகை செய்யும் சட்டங்களை இலங்கை ஏற்றுள்ளது. இந்தியா இத்தகைய சட்டங்களை விரைவில் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விஷயங்கள் பொருத்தமான வேளைகளில் சட்ட நிபுணர்களால் பரிசீலனை செய்யப்பட வேண்டியவையாகும்.

இப்படி அமைச்சர் ஹேரத் சொன்னார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘உதயன்’ கிண்ணத்துக்காக

# பொது அறிவுப் போட்டி: 1,000 மாணவர் பங்குபற்றுவர்

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் — ‘‘உதயன்’’ சுற்றுக் கிண்ணத்துக்காக — பொது அறிவுப் போட்டி ஒன்றை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி லியோ கழகமும், சுன்னாகம் லயன்ஸ் கழகமும் இணைந்து எதிர்வரும் 16ஆம் திகதி நடத்தவிருக்கின்றன.

இந்தப் போட்டியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட — பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த — ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை மறுதினம் நண்பகல் 12 மணிக்கு எழுத்துப் பரீட்சை இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். முடிவுகள் அன்று மாலையே அறிவிக்கப்படும்.

எழுத்துப் பரீட்சையில் வெற்றி பெறும் முதல் பத்து மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி மறுநாள் பிற்பகல் 2-30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்,

வெற்றி பெறும் மூவருக்கு அன்று பரிசில்கள் வழங்கப்படும்.

முதல் பரிசாக உதயன் வெற்றிக் கிண்ணமும், தங்கப் பதக்கமும், இரண்டாம் பரிசாக ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 500 ரூபாவும் வழங்கப்படும். [உ-3]

## நெடுந்தீவுக்கு உணவு

நெடுந்தீவுப் பகுதி மக்களுக்கு விநியோகிக்கவென 60 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் ‘குமாரி’ கப்பல் மூலம் அங்கு அனுப்பப்படுகிறது.

திருகோணமலையிலிருந்து இந்தக் கப்பல் இன்று புறப்பட்டு நெடுந்தீவில் பொருள்களை இறக்கிவிட்டு, நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்து சேரவுள்ளது. [ஒ-3]

# மரண அறிவித்தல்கள்

## பெரியதம்பி சபாரெத்தினம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் 8/7 சீனிவாசகம் வீதி கொட்டடியைச் சேர்ந்தவருமான பெரியதம்பி சபாரெத்தினம் 12-3 92 வியாழக்கிழமை அகாலமரணமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்றவர்களான பெரியதம்பி பெரியனாச்சியின் அன்புப் புதல்வனும் மற்றும் தங்கலெட்சுமியின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசி, சிவராசா [சுவிஸ்], தருமராசா [சுவிஸ்], யோகராசா [சுவிஸ்], புஸ்பராணி [வசந்தி], ஆனந்தராசா [மோகன் – இந்தியா] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவபாலன் [சுவிஸ்], பரிமளம் [சுவிஸ்], விஜயலெட்சுமி [சுவிஸ்], சுகந்தி [சுவிஸ்], அரியநாதன் ஆகியோரின் அருமை மாமனாரும், நிர்மலா, சிவகுமார், [சடாயு—போராளி], தவகுமார், ஷர்மிளா, அனுஷா, லாவண்யா, லங்காதரன், சுயேந்தன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புப் பேரனும், இராசரெத்தினம், காலஞ்சென்ற பொன்னுத்துரை, காலஞ்சென்ற கன்னையா, தங்கராசா, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும், செல்லம்மா, கண்ணம்மா, இராசலெட்சுமி, நித்தியலெட்சுமி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [14-3-92] சனிக்கிழமை காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்,

8/7 சீனிவாசகம் வீதி,
கொட்டடி.

[20067]

## வஸ்தியாம்பிள்ளை யோசேப்

குருநகரைச் சேர்ந்த வஸ்தியாம்பிள்ளை யோசேப் [முன்னாள் ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர்] 12 3-92 வியாழன் இரவு காலமானார்.

அன்னார் கிறிஸ்ரீனின் அன்புக் கணவரும், றோசன் [பொறியியலாளர், பஹறேன்], அசாந்தன் [நோர்வே], ஜெபம்நசன், ஜெயவதி ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி றோபேட் செல்வம், திருமதிகள் மேரி ஹெலன் குணசிங்கம் [இளைப்பாறிய ஆசிரியை, யாழ். கன்னியர்மடம் மகா வித்தியாலயம்], புஸ்பம் சேவியர் ஆகியோரது அன்புச் சகோதரரும், அடைக்கலநாயகி றோசன் [பஹறேன்], றெபேக்கா அசாந்தன் [நோர்வே], சகாயராணி ஜெபநேசன் ஆகியோரின் மாமனாரும், திருமதி சவுரியம்மா கிளைவ், ஆரோக்கியநாதன் [போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்], றொபேட், குணசிங்கம், சேவியர் ஆகியோரது மைத்துனரும், அன்ரனி கிளைவ் [இளைப்பாறிய ஊழியர், காணிப் பதிவகம், யாழ்ப்பாணம்] இன் சகலனும், டிலான், ஸ்ரெப்னி, ஸ்வப்னா, றூபினி, கமிலஸ், தர்சினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக அவரது இல. 57, மவுண்கார்மேல் வீதி இல்லத்தில் இருந்து இன்று [14-3-92] மாலை 4 மணிக்கு யாழ். கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

57, மவுண்கார்மேல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
கிளைவ்

[சி/1662]

## ஷப்றா வெற்றி!

யாழ்ப்பாணம், மார்ச் 14

உதயன் ஆதரவுடன் யாழ். நகர மத்தி றோட்டறக்ட் கழகம் நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஷப்றா அணி சாம்பியனானது.

சர்வதேச றோட்டறக்ட் தினமான நேற்று யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஷப்றா அணி யாழ். பல்கலைக்கழக சலப்பு அணியை 38 – 24 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

எட்டுக் கழக அணிகள் கலந்துகொண்ட இந்தப் போட்டியில் பங்குபற்றிய ஐந்து ஆட்டங்களிலும் ஷப்றா அணி வெற்றியீட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களை வழங்கினார். [உ]

## “பிராவ்தா” இடைநிறுத்தம்

மாஸ்கோ, மார்ச் 14

மறைந்த சோவியத் யூனியனின் தந்தை லெனினால் ஸ்தாபிக்கப்பட்ட ‘பிராவ்தா’ தினசரி பிரசுரிக்கப்படுவது இடைநிறுத்தஞ் செய்யப்பட்டுள்ளது.

வெளியீட்டுச் செலவு அதிகரித்திருப்பதன் காரணமாக இம் முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சினின் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு ‘பிராவ்தா’ பலியாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## கோரிக்கை

நியூயோர்க், மார்ச் 14

வளைகுடா யுத்த நிறுத்தம் தொடர்பான நிபந்தனைகளை உடனடியாக, பூரணமாக, நிபந்தனையற்ற முறையில் நிறைவேற்றுமாறு ஐ. நா. பாதுகாப்புச் சபை ஈராக்கை இறுதியாகக் கேட்டுள்ளது.

யுத்த நிறுத்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் ஈராக் கடைப்பிடிக்கும் இழுத்தடிப்பு குறித்து பாதுகாப்புச் சபை இரு தினங்களாக ஆராய்ந்தது. அதன் பின்னர் பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் ஈராக் உதவிப் பிரதமர் தலைமையிலான குழுவைச் சந்தித்து பேசினர்.

அதைத் தொடர்ந்து முன் கண்டவாறு பாதுகாப்புச் சபை ஈராக்குக்கு இறுதிக் கோரிக்கை விடுத்திருக்கிறது.

## மாத்தளையில் போத்தல் குண்டு

கொழும்பு, மார்ச் 14

மாத்தளை சுதுகங்கையில் மிதந்து வந்த போத்தல் ஒன்றை எடுத்துச் சோதிக்க முயன்ற இளைஞர் ஒருவர் அந்தப் போத்தல் திடீரென வெடித்ததால் படுகாயமடைந்தார்

அப்போத்தலினுள் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர். [உ-எ]

## நேற்றும் அகதிகள் திரும்புனர்

சென்னை, மார்ச் 14

510 பேரைக் கொண்ட ஆறாவது தொகுதி இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று காலை இராமேஸ்வரத்தில் இருந்து எம். வி. ராமானுஜம் கப்பலில் தலைமன்னார் நோக்கிப் புறப்பட்டனர்.

இவர்களுடன் சேர்த்து இதுவரை 3 ஆயிரத்து 256 அகதிகள் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## ஸ்ரீலங்கா அணி தோல்வி

உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டி தொடரில் ஸ்ரீலங்கா அணியை மேற்கிந்தியத் தீவுகள் அணி 91 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 268 ஓட்டங்கள் எடுத்தது.

ஸ்ரீலங்கா அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 177 ஓட்டங்களை எடுத்தது. [இ-எ]

## நாடுகள் பெற்ற புள்ளிகள்

மெல்போர்ன், மார்ச் 14

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கு கொள்ளும் ஒன்பது நாட்டு அணிகளும் இதுவரை பங்குபற்றிய ஆட்டங்கள் மற்றும் வெற்றி, தோல்வி, அதன் மூலம் பெற்ற புள்ளிகள் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு:-

| நாடுகள் | ஆட்டம் | வெற்றி | தோல்வி | சமம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 6 | 6 | — | — | 12 |
| இங்கிலாந்து | 6 | 5 | — | 1 | 11 |
| தென்னாபிரிக்கா | 7 | 4 | 3 | — | 8 |
| மேற்கிந்தியா | 7 | 4 | 3 | — | 8 |
| பாகிஸ்தான் | 6 | 2 | 3 | 1 | 5 |
| ஸ்ரீலங்கா | 7 | 2 | 4 | 1 | 5 |
| இந்தியா | 7 | 2 | 4 | 1 | 5 |
| ஆஸ்திரேலியா | 6 | 2 | 4 | — | 4 |
| ஸிம்பாப்வே | 6 | — | 6 | — | — |

## போதை வஸ்து கடத்தினார்:

# ஆஸ்திரியப் பெண்ணுக்கு கொழும்பில் 15 வருட சிறை!

நாட்டிற்குள் 41 கிராம் ஹெரோயின் போதைவஸ்துவைக் கடத்தி வர முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் 27 வயதுடைய ஆஸ்திரியப் பெண் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பதினைந்துஆண்டு கால சிறைத் தண்டனை விதித்திருக்கிறது.

1990 டிசம்பரில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தனது கணவருடன் வந்திறங்கிய போது அந்தப் பெண் கைது செய்யப்பட்டார்.

கருத்தடை உறைக்குள் 41 கிராம் ஹெரோயினை அந்தப் பெண் மறைத்து வைத்திருந்ததை அப்போது சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்தனர். அவரது கணவரும் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். அவரும் விசாரணை செய்யப்பட்டு வருவதாக போதைவஸ்துத்தடுப்புப் பிரிவுப் பொலீஸார் தெரிவித்தனர். [உ-எ]

# செலாவணிச் சலுகைகள் பல புதிதாக அறிவிப்பு

வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகள் பலவும் தளர்த்தப்பட்டுள்ளன.

இலங்கையர் ஒருவர் விடுமுறையின் போது வெளிநாடு செல்லும்போது எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட செலாவணி 2 ஆயிரத்து 500 டொலர்களில் இருந்து 5 ஆயிரம் டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் வெளிநாடுகளுக்குப் பணம் அனுப்புவதில் உள்ள கட்டுப்பாடுகளும் நீக்கப்படும் என்று மத்திய வங்கி ஆளுநர் நெவில் கருணதிலக்கா தெரிவித்தார்.

வைத்திய செலவுகள், காப்புறுதி செலுத்துதல், கல்விச் செலவுகள் ஆகியவற்றுக்கு எல்வித கட்டுப்பாடும் இன்றி வெளிநாடுகளுக்குப் பணம் அனுப்பவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியக் குழுவைச் சேர்ந்த நாடுகளுக்குப் பயணம் செய்யும் பெண் ஒருவர் வேறு பொருள்களாகத் திருப்பிக் கொண்டு வரும் அடிப்படையில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும்.

தாராள பொருளாதாரக் கொள்கை காரணமாக இப்போது செலாவணி இருப்பு அதிகரித்திருப்பதாகவும்—

அதனாலேயே இந்தப் புதிய வசதிகளை வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# ராமராவ் கட்சியில் பிளவு! ஐவர் காங்கிரஸ் பக்கம்!!

ஆந்திராவின் தெலுங்கு தேசம் கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளதை லோகசபை சபாநாயகர் சிவராஜ் பாட்டீல் அங்கீகரித்திருக்கின்றார்.

திரு. விஜயகுமார் ராஜு தலைமையிலான தெலுங்கு தேசம் எம். பிக்கள் குழுவிற்கு லோகசபையில் அவர் தனியாக இடம் ஒதுக்கியிருக்கின்றார்.

தெலுங்கு தேசம் கட்சியில் உள்ள 13 எம் பிக்களில் 5பேர் விலகி புதிய குழுவில் சேர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விலகிச் சென்ற எம். பிக்கள் இந்திரா காங்கிரஸில் சேர விருப்பம் தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.

ஐந்து எம். பிக்கள் விலகிச் செல்வது தெலுங்குதேசம் கட்சித் தலைவர் என். ரி. ராமராவுக்கு பலத்த அரசியல் அடி என்று தெரிவிக்கப்படுகிறது.

## பேச்சு

மலையகத் தமிழ் இளைஞர்கள் கைதானமை குறித்து ஜனாதிபதியின் பணிப்பின் மீது பிரதமர் விஜேதுங்க தலைமையிலான குழு ஒன்றும் அமைச்சர் தொண்டமான் தலைமையிலான குழு ஒன்றும் நேற்றுக் கூடி பேச்சுக்கள் நடத்தின. [உ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org